தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

14.05.2013 A.M

## நீரின்றி கருகும் கரும்பு பயிர்கள்! வேதனையில் விவசாயிகள்



ரிஷிவந்தியம் பகுதியில், தற்போது கடும் வறட்சி நிலவுவதால் கரும்பு உள்ளிட்ட பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

திருக்கோவிலூரை அடுத்த ரிஷிவந்தியம் ஒன்றியத்துக்கு உள்பட்ட அரும்பராம்பட்டு, சீர்ப்பாதநல்லூர், இளையனார்குப்பம் உள்ளிட்ட பல கிராமங்களில் கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் தற்போது கடும் வறட்சி நிலவுதால், தண்ணீர் இன்றி கரும்புப் பயிர்கள் கருகி வருகின்றன. கிணறுகளில் இருந்த குறைவான தண்ணீரும் வெயிலின் தாக்கத்தால் மேலும் குறைந்து, நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்று விட்டது. இன்னும் ஒரு மாதத்துக்குள் குடிநீருக்கே அல்லாடும் சூழல் நிலவுகிறது.

இதுகுறித்து அரும்பராம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜெய்சங்கர் கூறியதாவது: மூங்கில்துறைப்பட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை உதவியுடன் கரும்பு பயிர் விவசாயத்தை மேற்கொண்டேன். தற்போது தண்ணீர் இல்லாததால் மேற்கொண்டு பயிரைக் காப்பாற்ற வழியில்லாத நிலை உள்ளது. விவசாயத்தைத் தவிர வேறு ஏதும் தெரியாததால் மாற்று வேலைக்கு செல்லவும் வழியில்லை.

அரசும், மாவட்ட நிர்வாகமும் வறட்சிப் பகுதிகளை ஆய்வு செய்து நிவாரணம் ஏதேனும் வழங்கினால் தான் விவசாயத்தை விவசாயிகள் நினைத்துப் பார்க்க முடியும் என்றார். இதே நிலை

இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. ஏராளமான ஏக்கர் கரும்புப் பயிர்கள் கருகி வருவது, விவசாயிகளை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சிறு, குறு விவசாயிகளுக்கு மானியத்தில் விவசாய கருவிகள்

சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறை சார்பில் மானியத்தில் விவசாயக் கருவிகள் வழங்கப்படுகிறது என்றார் பொன்னமராவதி வேளாண் துணை இயக்குநர் பெ. கந்தசாமி.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பொன்னமராவதி வட்டாரத்தில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு விவசாய தொழில் நுட்பங்கள் விளக்கப்பட்டு வருகிறது. இவ்விழாக்களில் அறந்தாங்கி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்கள் சங்கர் மற்றும் சோமசுந்தரம் பங்கேற்று தங்கள் துறையின் திட்டங்களை விளக்கி வருகின்றனர். இதன்படி நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் சிறு குறு விவசாயிகளுக்கு நூறு சத மானியத்தில் சொட்டு நீர் தெளிப்பு நீர் பாசன கருவிகள், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்தில் சொட்டுநீர் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படும். மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் பண்ணைக்குட்டை அமைத்திட தனிநபர் மானியமாக ரூ. 60 ஆயிரமும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு 95 சத மானியத்தில் பண்ணைக்குட்டையும் அமைத்து தரப்படும். வேளாண்மை இயந்திரமாக்குதல் திட்டத்தின் கீழ் டிராக்டர் பவர்டில்லர் வாங்கும் விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக ரூ. 45 ஆயிரம் வழங்கப்படும். சுழல்கலப்பை வாங்கும் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 20 ஆயிரம் மானியமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வம்பனில் இன்று மாம்பழம் பதப்படுத்தும் பயிற்ச

புதுக்கோட்டை அருகே வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாம்பழங்களை பதப்படுத்தும் முறைகள் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம்செவ்வாய்க்கிழமை (மே14) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்: புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,252 எக்டேர் பரப்பளவில் மாம்பழப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏறத்தாழ ஆண்டுக்கு 45 ஆயிரத்து 40 டன் உற்பத்தியாகிறது. இதில் பெரும்பாலான அளவு மாம்பழம் நமது ஊரிலே கொள்முதல் மற்றும் விற்பனையும் 5 சதவிகிதத்துக்கு குறைவாக வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மா அறுவடை குறுகிய காலம் மட்டுமே நடைபெறுவதால் 25 லிருந்து 30 சதவிகிதப் பழங்கள் வீணாகிப் போவதுடன் விவசாயிகள் மிகக்

குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறது. இதற்கு போதிய குளிர்ப் பதன கிடங்கு வசதியும், பதப்படுத்தும் தொழில் சாலைகள் இல்லாததும் காரணம்.

இச்சூழ்நிலையில், மாம்பழங்களை பதப்படுத்தி அடர் கூழ், ஜூஸ், ஜாம், சாக்லேட் போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களைத் தயார் செய்து நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம். இதற்கு உதவும் வகையில் ஒரு நாள் இலவசப் பயிற்சி வம்பன், வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தை, 04322 - 290321, கைபேசி- 94447 19043 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## மே 17 -ல் விவசாயிகள் குறைகேட்பு முகாம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கான குறை கேட்பு முகாம் வெள்ளிக்கிழமை (மே17) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் நடைபெற உள்ள முகாமில், பல்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

## வேளாண் துறை மூலம் நேரடி பசும்பால் விற்பனை நிலையம் திறப்பு

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையினரால் அமைக்கப்பட்டுள்ள கறவை மாடு குழுக்களின் பசும்பால் விற்பனை மையத்திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை காமராஜபுரம் 19 -ம் வீதியில் அமைக்கப்பட்ட புதிய விற்பனை நிலையத்தை புதுகை கனரா வங்கியின் முதன்மை மேலாளர் சாம்மனோகரன் திறந்து வைத்தார். முதல் விற்பனையை மேலாளர் எம். கல்யாணசுந்தரம் தொடக்கி வைத்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையால் ஏற்கெனவே உழவர் சந்தை, பெரியார் நகர், பூங்காநகர், டிஎஸ்எம்எஸ் வணிக வளாகம், காமராஜபுரம், மச்சுவாடி, வஉசி நகர், திருவப்பூர், ஆலங்குளம் அரசு ஊழியர் குடியிருப்பு, திருக்கோகர்ணம் உள்ளிட்ட 11 இடங்களில் நேரடி பால் விற்பனை நிலையம்

தொடங்கி வைக்கப்பட்டது. இதையடுத்து தற்போது காமராஜபுரம் 19-ம் வீதியில் மேலும் ஒரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டது. இதில், புதுக்கோட்டை மாவட்ட வேளாண் அலுவலர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, அலுவலர்கள் சுந்தரேசன், வி. தேசபந்து, என் சுப்பிரமணி,கலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏற்பாடுகளை நேரடி பால் விற்பனை மையங்களின் ஒருங்கிணைப்பாளரும் கிரீன்கேர் பவுண்டேஷன் தலைவருமான வி. ரவீந்திரன் செய்திருந்தார்.

## "வறட்சியைப் போக்க ரூ. 47 கோடியில் பணிகள்'

கரூர் மாவட்டத்தில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ரூ. 47 கோடியில் பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன என்றார் போக்குவரத்துத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி.

கரூர் ஆட்சியரகத்தில் கோடையில் நிலவும் வறட்சியைப் போக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு அவர் கூறியது:

கரூர் மாவட்டத்தில உள்ள 2 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 157 கிராம ஊராட்சிகளில் குடிநீர் பற்றாக்குறையை தவிர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ. 21 கோடியில் 627 ஆழ்குழாய்கள், 388 மினி பவர் பம்புகள், 423 இதர பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும் வறட்சியைப் போக்க, போர்க்கால அடிப்படையில் ரூ. 26 கோடியில் 374 அடிகுழாய்களும், 396 மினிபவர் பம்புகளும், 703 இதர பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன என்றார்.

கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தலைமை வகித்தார். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) டி.ஜி. வினய், எம்எல்ஏ பாப்பாசுந்தரம், மாவட்ட ஊராட்சித் தலைவர் கீதாமணிவண்ணன், நகராட்சிப் பொறியாளர் புண்ணியமூர்த்தி, கோட்டாட்சியர் நெல்லைவேந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மே 16 -ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

கரூரில் மே 16-ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில், ஆட்சியரகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் கலந்து கொள்ள வேண்டும். கூட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## மே 16-இல் ஜப்பானிய காடை வளர்ப்புப் பயிற்சி

ஜப்பானிய காடை வளர்ப்புக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வியாழக்கிழமை (மே 16) நடைபெற உள்ளது.

பயிற்சியில் ஜப்பானிய காடை இனங்கள் குறித்தும், அவற்றுக்கு கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறைகள், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்குத் தேவையான தீவன அளவுகள், முட்டைகள் சேகரித்து குஞ்சு பொரிக்கும் விதம், நோய்களும், அவற்றை தடுக்கும் முறைகளும் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15ஆம் தேதிக்குள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (மே 14) நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

திருவண்ணாமலை ஒன்றியம் சின்னகாங்கியனூர், பள்ளிகொண்டாப்பட்டு, சம்மந்தனூர், துரிஞ்சாபுரம் ஒன்றியம் வள்ளிவாகை, குன்னியந்தல், கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் கடம்பை, சிறுகொத்தான், செங்கம் ஒன்றியம் அரசங்கண்ணி, ஆனந்தவாடி, தண்டராம்பட்டு ஒன்றியம் மேல்சிறுப்பாக்கம், வேப்பூர்செக்கடி, புதுப்பாளையம் ஒன்றியம் புலியூர், நெல்லிவாய், போளூர் ஒன்றியம் சேதாரம்பட்டு, குப்பம், பட்டரைகாடு ஆகிய கிராமங்களில் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இதேபோல, கலசப்பாக்கம் ஒன்றியம் வன்னியனூர், அருணகிரிமங்கலம், சேத்துப்பட்டு ஒன்றியம் கண்ணனூர், இடையன்கொளத்தூர், ஆரணி ஒன்றியம் தச்சூர், மேற்கு ஆரணி ஒன்றியம் இரும்பேடு, வந்தவாசி ஒன்றியம் உளுந்தை, அமணம்பாக்கம், சீயாளம், தெள்ளார் ஒன்றியம் கடம்பை, கீழ்வெள்ளியூர், கூனம்பாடி, பெரணமல்லூர் ஒன்றியம் இஞ்சிமேடு, மகாதேவிமங்கலம், செய்யாறு ஒன்றியம் வாழ்குடை, புளுந்தை, அனக்காவூர் ஒன்றியம் பையூர், மேல்நர்மா, வெம்பாக்கம் ஒன்றியம் பிரம்மதேசம், பனைமுகை, அரியூர் ஆகிய கிராமங்களிலும் செவ்வாய்க்கிழமை உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இவ்விழாக்களில் வேளாண் கண்காட்சியும் நடத்தப்படுகிறது. எனவே, அந்தந்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் பகுதிகளில் நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இர.சக்கரவர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

## தெள்ளாறில் பலத்த காற்றுடன் மழை

வந்தவாசியை அடுத்த தெள்ளாறில் ஞாயிற்றுக்கிழமை இரவு பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது.

இதனால் தெள்ளாறு வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திலிருந்த மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. மேலும் தெள்ளாறு மற்றும் அதைச் சுற்றியுள்ள சேனல், அகரகொரக்கோட்டை உள்ளிட்ட கிராமங்களில் பலத்த காற்றினால் 50-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்தன.

மேலும் வந்தவாசி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் திங்கள்கிழமை அதிகாலை லேசான தூறல் காணப்பட்டது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 29.70 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 29.70 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 318 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது.

வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.13 டி.எம்.சி.

## பசுந்தீவனம் சாகுபடிக்கு 50 % மானியம்

திருப்பூர் மாவட்டத்தில் வறட்சியால் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், 1,100 ஏக்கரில் பசுந்தீவனம் சாகுபடி செய்ய 50 சதவீதம் மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதுகுறித்து விவசாயிகளுக்கு விளக்கும் வகையில் ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்பு விவசாயிகள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் ஆட்சியர் கோவிந்தராஜ் பேசியது: 1,100 ஏக்கரில் பசுந்தீவனம் சாகுபடி செய்யவும், அதற்காக 50 சதவீத மானியம் வழங்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ.13,600 மதிப்பில் இறவையில் தீவனப் பயிர் (சோளம்) சாகுபடி செய்வதற்கு 50 சதவீதம் அரசு மானியமாக ரூ.6,800 வழங்கப்படும்.

இத் திட்டம் மூலமாக விவசாயிகள் சாகுபடி செய்யும், பசுந்தீவனம் உபரியாக இருக்கும்பட்சத்தில் அதை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, பசுந்தீவனம் தேவைப்படும் பிற விவசாயிகளுக்கு 50 சதவீதம் அரசு மானியத்தில் வழங்கப்படும் என்றார்.

## குளோனிங் முறையில் உருளைக்கிழங்கு நாற்று உற்பத்தி

விதைக்கிழங்கை கொண்டு உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு வந்ததற்கு மாறாக, குளோனிங் முறையில் உருளைக்கிழங்கு நாற்றுகளை உற்பத்தி செய்துள்ளது மேட்டுப்பாளையம் ஈடன் நர்சரி கார்டன்.

இது குறித்து மேட்டுப்பாளையம் ஈடன் நர்சரி கார்டன் நிர்வாகிகளான எஸ்.ராஜரத்தினம், ஏ.அப்துல் கபார் ஆகியோர் கூறியது:

ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட விதைக்கிழங்கு மூலம் 100 ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் முதன்முதலாக நீலகிரி மலைப் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது. அங்கு நிலவிய குளிர் சீதோஷ்ண நிலை காரணமாக மாவட்டம் முழுவதும் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டு, நாளடைவில் நீலகிரி மக்களின் முக்கிய விவசாயப் பயிராக மாறியது. 1900 முதல் 1980-களின் இறுதிவரை நீலகிரி மக்களுக்கு உருளைக்கிழங்கு பயிரிடுவது, ஆதாயம் தரக்கூடியதாக இருந்து வந்தது.

ஆனால், விதைக்கிழங்கு, உரம், பூச்சிகொல்லி போன்றவற்றின் விலை உயர்வால் உருளைக்கிழங்கு விவசாயிகள் பெரும் இழப்பை சந்திக்க நேரிட்டது. இதனால் சமீபகாலமாக நீலகிரியில் கிழங்கு பயிரிடுவது பலமடங்கு குறைந்து வருகிறது.

இதை கருத்தில்கொண்டு மாற்று வழியில் கிழங்கு உற்பத்தி செய்வது குறித்து எங்கள் நர்சரியில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பலனாக தற்போது குளோனிங் முறையில் உருளைக்கிழங்கு நாற்றை உற்பத்தி செய்துள்ளோம்.

பொதுவாக விதைக்கிழங்குகளை கொண்டு சாகுபடி செய்யப்படும் உருளைக்கிழங்குகள் பெரியது, சிறியது, மீடியம் என பல ரகங்களில் உற்பத்தியாகின்றன. இதனால்  உற்பத்தி கணிசமாக குறைந்து, விவசாயிகளுக்கு வருமான இழப்பு ஏற்படவும் காரணமாகிறது. இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, அதிக விளைச்சல் தரும் ரகங்களை உற்பத்தி செய்யவே, குளோனிங் முறையில் நாற்றுகளை உற்பத்தி செய்கிறோம். தரமான கிழங்குகளிலிருந்து இந்த நாற்றுகளை உற்பத்தி செய்வதால் அதிலிருந்து கிடைக்கும் கிழங்குகளும் தாய் கிழங்கின் தரத்தையே ஒத்திருக்கும். இதனால் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்றனர் அவர்கள்.

## ராமநாதபுரத்தில் மே 17 விவசாயிகள் குறை தீர் கூட்டம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள ஊராட்சி மன்ற கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 17 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு ஆட்சியர் க. நந்தகுமார் தலைமையில் நடைபெற உள்ளதாக ஆட்சியர் அலுவலகம் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு வேளாண்மை  சார்ந்த பொருள்கள் குறித்து மட்டும் விவாதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேளாண் உபகரணங்கள்: அமைச்சர் வழங்கினார்

விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 2.31 லட்சம் மதிப்பிலான வேளாண் உபகரணங்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் வழங்கினார்.

போகலூர் ஒன்றியம், எஸ். கொடிக்குளம் கிராமத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு போகலூர் ஒன்றியக் குழுத் தலைவர் ஜி. நாகநாதன் தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலர் ஜி. முனியசாமி, ஊராட்சி மன்றத் தலைவர் மனோகரன், மாவட்டக் கவுன்சிலர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குநர் சக்திமோகன் வரவேற்றார்.

அமைச்சர் எஸ். சுந்தரராஜ் வேளாண் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியைப் பார்வையிட்டு, மானிய விலையில் விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்களை வழங்கிப் பேசியதாவது:

உணவு உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. உற்பத்தியைப் பெருக்கவும், அதன் மூலம் விவசாயிகள் அதிக வருவாய் பெறவும், வேளாண் துறைக்கு முதல்வர் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்.

அரசு திட்டங்கள் மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காகத்தான் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் இயற்கை உரம் மூலம் விவசாயத்தை பெருக்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு நூற்பாலைகளும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் நஷ்டத்தில் இயங்கின. நெசவாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் ஜெயலலிதா மீண்டும் முதல்வரானதும் அவரது மதிநுட்பத்தால் அனைத்தும் லாபத்தில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 1,164 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இதில் 908 சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன. நெசவாளர்களுக்கு 60 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டப்பட உள்ளன.

மக்கள் விரும்பும் வகையில் சிறந்த வடிவமைப்பில் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு முதல்வர் ரூ.1 லட்சம் பரிசு வழங்கவுள்ளார். இதை நெசவாளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

விழாவில் வேளாண் துறையினர், விவசாயிகள், மக்கள் பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## உழவுத் தொழிலை மேம்படுத்தவே உழவர் பெருவிழா

உழவுத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடனே கிராமங்களில் உழவர் பெருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி கூறினார்.

பொன்னேரி வட்டம், சோழவரம் ஒன்றியத்தில் உள்ள சோழிப்பாளையம், ஆங்காடு கிராமங்களில் உழவர் பெருவிழாக்கள் சனிக்கிழமை நடைபெற்றன.

இதில், சோழிப்பாளையம் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு சோழவரம் ஊராட்சிமன்றத் தலைவர் பிரபாகரன் தலைமை வகித்தார்.

திருவள்ளூர் எம்.பி. வேணுகோபால், சோழவரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கார்மேகம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி பங்கேற்று 23 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியது:

உழவுத்தொழில் செய்யும் மக்கள் பயன்பெறும் வகையில் உழவர் பெருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

இந்த விழா, விவசாயிகளுக்கும் வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கும் பாலமாக அமைந்துள்ளது.

நலிவடைந்து வரும் உழவுத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன் கிராமங்கள்தோறும் இந்த உழவர் பெருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் கிராமங்களில் 100 நாட்களாக இருந்த வேலை உறுதித் திட்டம் தற்போது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த கூலியான ரூ.132-ஐ 148-ஆக தமிழக அரசு உயர்த்தியுள்ளது.

இதனை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் திலகவதி, ஒரக்காடு ஊராட்சிமன்றத் தலைவர் வசந்திபாஸ்கரன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

இதே போல், ஆங்காடு கிராமத்தில் ஊராட்சிமன்றத் தலைவர் காமராஜ் தலைமையில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் மாணவர்கள் 7 பேருக்கு கல்வி உதவித்தொகையை அமைச்சர் மூர்த்தி வழங்கினார்.

## கால்நடை தீவனம் வளர்க்க மானியம்:விண்ணப்பங்கள் வரவேற்பு

கால்நடை தீவனம் வளர்க்கும் திட்டத்துக்கு, விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தில், 550 ஏக்கரில், கால்நடை தீவனம் வளர்க்க அரசு மானியம் அறிவித்துள்ளது. குறைந்த அளவாக 0.25 ஏக்கர் முதல், ஒரு ஏக்கர் வரையில் விவசாயிகள் கால்நடை தீவனம் பயிரிடலாம். இதற்கான, விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து இருந்து வரவேற்கப்படுகின்றன. ஒரு ஏக்கரில், பயிரிடும் விவசாயிக்கு ரூ. 8 ஆயிரம் வரையிலும் மானியம் வழங்கப்படும்.

மதுராந்தகம், செய்யூர், உத்தரமேரூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களை சீர் செய்து, தீவனப் பயிரை பயிரிட்டு பயனடையலாம். தகுதியுடைய, விவசாயிகள் வேளாண்மை அலுவலரின் பரிந்துரைச் சான்று பெற்று, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில், உதவி மருத்துவரிடம் வழங்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சூறைக்காற்றுடன் மழை; மரங்கள் சாய்ந்தன

விருத்தாசலத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ததால் திங்கள்கிழமை அக்னி வெயிலின் தாக்கம் குறைந்தது.

கடந்த சில வாரங்களாக அக்னி வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்து வந்தது. பகல் நேரங்களில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

வெயிலின் தாக்கத்தால் மிகுந்த சிரமத்தில் இருந்த பொதுமக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில், ஞாயிற்றுக்கிழமை இரவு விருத்தாசலம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் சூறைக்காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இதனால் ஒரு சில மரங்கள் முறிந்தும், நகரங்களில் பேனர்கள் வைப்பதற்காக கட்டப்பட்டிருந்த சாரங்கள் சரிந்தும் சாலையோரங்களில் விழுந்தன.

இருப்பினும் சூறைக்காற்றுடன் பெய்த மழையால் பெரியளவில் பாதிப்பு ஏற்படவில்லை.

திங்கள்கிழமை காலை சற்று தூரல் விழுந்தது. இதைத் தொடர்ந்து நாள் முழுவதும் குளிர்ச்சியான சூழல் நிலவியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி

அடைந்தனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

14.05.2013 A.M

## விவசாயிகளுக்கு அழைப்பு

தேனி:கோடை மழையில் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள், மானிய விலையில் விதைகளை பெற்றுக்கொள்ளலாம். மாவட்டம் முழுவதும் விவசாய விரிவாக்க மையங்களில், விதை நெல் இருப்பு உள்ளது. நெல் விதை கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு உட்பட பயறு வகை விதைகளும், தேவைக்கு ஏற்ப இருப்பு உள்ளது. எண்ணெய் வித்துக்களும், பருத்தி விதைகளும் உள்ளன. பயறு வகை, எண்ணெய் வித்து விதைகள் வாங்கும் விவசாயிகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. கோடை மழை பெய்து வரும் நிலையில், விதைகள் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.எனவே விதைகள் தேவைப்படும், விவசாயிகள் விரிவாக்க மையங்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

## சிவகிரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம்

சிவகிரி:சிவகிரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம் நடந்தது.

தென்காசி கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் முகாமிற்கு தென்காசி ஆர்டிஓ ரமேஷ் தலைமை வகித்தார். சிவகிரி தாசில்தார் புகாரி, செங்கோட்டை தாசில்தார் கிருஷ்ணவேணி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் முன்னாள் அட்மா சேர்மன் டாக்டர் செண்பகவிநாயகம் பேசும்போது, மேற்கு தொடர்ச்சி மலையடிவாரப் பகுதிகளில் காட்டிலுள்ள வனவிலங்குகள் அருகிலுள்ள விவசாய நிலங்களுக்குள் புகுந்து விளைபொருட்களை சேதப்படுத்துகின்றன. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே வனவிலங்குகள் வயல்பகுதிகளுக்குள் புகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வனத்துறையினரால் அமைக்கப்பட்ட சோலார் முள்வேலி செயலிழந்து உள்ளது. அதனை சரி செய்ய வேண்டும்.பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார். ராசிங்கபேரிகுளம் நீர்பிடிப்பு பாசனக்குழு தலைவர் சுப்பிரமணியன் பேசும்போது, விவசாயிகளால் தேர்வு செய்யப்பட்டுள்ள எங்களுக்கு என்ன அதிகாரம், பொறுப்பு என்பது குறித்து தேர்வு ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகியும் தெரியவில்லை. எங்களின் கோரிக்கையை அரசு

உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட நெல் விவசாயத்திற்கு மட்டும் இல்லாமல் அனைத்து பயிர்களுக்கும் பாதிப்புக்கு தகுந்தவாறு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றார்.

சின்னாவுடையாப்பேரி நீர்பாசன குழு தலைவர் ரத்தினவேலு பேசும்போது, குளத்தில் உள்ள கரம்பை மண்ணை கூட விவசாயத்திற்கு அள்ள முடிவதில்லை. இதுகுறித்து கேட்டால் கலெக்டரிடம் அனுமதி வாங்கி வரச் சொல்கின்றனர். இதனால் விவசாயிகள் சரியாக விவசாயம் செய்ய முடியாத நிலையில் குறைந்த விளைச்சலை மட்டுமே பெற முடிகிறது. ஆனால் அனைத்து செங்கல் ‹ளைகளிலும் மலைபோல் மண் குவிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயம் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசின் இந்த கொள்கையை மாற்றி விஏஓ அளவில் அதிகாரத்தை தரவேண்டும். வயல் பகுதிகளுக்கு கரம்பை மண் அடிப்பதற்கு விஏஓ அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ராயகிரி டவுன் பஞ்., தலைவர் இரணவீறு பேசும்போது, இப்பகுதி விவசாயிகளின் நீண்ட கால கோரிக்கையான கோம்பை ஆற்றுத் திட்டம், செண்பகவல்லி அணைத்திட்டம், உள்ளாறு நீர்த்தேக்க திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றார்.
தென்காசி ஆர்டிஓ பேசும் போது, விவசாயிகளின் கோரிக்கையை ஆய்வு செய்து மாவட்ட கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றார்.
ஆர்டிஓ தனி அலுவலர் ராஜாராம், மண்டல துணை தாசில்தார் சாம்பமூர்த்தி, விஏஓக்கள் மாரிமுத்து, கஸ்தூரி, சுந்தரி, கனகவள்ளி, வேளாண்மை துறை இயக்குனர் வெள்ளைப்பாண்டி, வணிகத்துறை கங்காதரன், கோமதிநாயகம், தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் குணசேகரன், முருகானந்தம், மாரியப்பன், முத்துமாரிஉட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சி நிவாரண நிதி வழங்கப்படாததால் நிலையப்பட்டி கிராம விவசாயிகள் ஏமாற்றம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை அருகே நிலையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 250 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கப்படாததால் ஏமாற்றமடைந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் தாலுகா புல்வயல் கிராமத்துகுட்பட்டது நிலையப்பட்டி. இக்கிராமத்தில் கிட்டத்தட்ட 500 ஏக்கர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களில் அப்பகுதியைச் சேர்ந்த 250 சிறு மற்றும் குறு விவசாயிகள் விவசாயம் செய்துவருகின்றனர். விவசாயிகளின் இந்த

விளை நிலங்கள் அனைத்தும் ஒரே சர்வே நம்பரில்(எண்:297/2) மேஜர் இனாம் என்று உள்ளது. மன்னர் காலத்தில் தானமாக வழங்கப்பட்ட நிலம் என்பதால் மேஜர் இனாம் என அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அக்கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு இதுவரை தனி பட்டா வழங்கப்படவில்லை. இதனால் அரசின் சலுகைகளை பெற முடியாமல் அக்கிராம விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

மேஜர் இனாம் என்பதை வகை மாற்றம் செய்து விவசாயிகளின் பெயரில் தனி பட்டா வழங்கக் கோரி மாவட்ட கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பல முறை மனுக்கள் கொடுத்தும் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை.

இந்நிலையில் வறட்சினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசு சார்பில், நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

புல்வயல் பஞ்சாயத்துகுட்பட்ட இதர அனைத்து கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில் நிலையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மட்டும் நிவாரண உதவித்தொகை வழங்கப்படவில்லை.

ஏமாற்றமடைந்துள்ள அப்பகுதி விவசாயிகள், "வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கும் அரசு சார்பில் நிவாரண நிதி உதவி வழங்கவேண்டும்' எனக்கோரி, தமிழக முதல்வர், வருவாய் மற்றும் வேளாண் துறை அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், கலெக்டர் ஆகியோருக்கு மனு அளித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கிராமங்களில் மேஜர் இனாம், மைனர் இனாம் என்றிருந்த நிலங்கள் வகைமாற்றம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நிலையப்பட்டி கிராமத்தில் மட்டும் மேஜர் இனாம் என்பதை வகைமாற்றம் செய்து விவசாயிகளுக்கு பட்டா வழங்க வருவாய்த்துறையினர் முன்வரவில்லை.

மாவட்டம் நிர்வாகம் இதில் தனிக்கவனம் செலுத்தி விவசாயிகளின் நிலங்களை வகைமாற்றம் செய்து பட்டா வழங்கவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

## ஆமனக்கன்தோண்டி பஞ்.,ல் உழவர் பெருவிழா

உடையார்பாளையம்: உடையார்பாளையம் அருகே உள்ள ஆமனக்கன்தோண்டி பஞ்சாயத்தில் உழவர் பெருவிழா நடந்தது.

விழாவிற்கு பஞ்சாயத்து தலைவர் மாணிக்கம் தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க தலைவர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். பஞ்சாயத்து செயலாளர் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். ஜெயங்கொண்டம் வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன், வேளாண் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றியும், வேளாண்மை துணை அலுவலர் பொய்யாமொழி, எலி ஒழிப்பு, திருந்திய நெல் சாகுபடி, கோடை உழவு, மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார்.

தோட்டக்கலை துறை அலுவலர்கள் பெருமாள், சண்முகவேல் ஆகியோர் காய்கறி உற்பத்தி செய்வது பற்றியும், முந்திரி, கடலை பயிர்கள் தரம் பிரிப்பது குறித்தும் பேசினர். மேலும் விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுத்தல் உள்ளிட்டவை குறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

வேளாண் உதவி அலுவலர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

## விப்பேடு கிராமத்தில் வெள்ளரி சாகுபடி அமோகம் ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் லாபம்

திருக்கழுக்குன்றம்:திருக்கழுக்குன்றம் அடுத்த விப்பேடு கிராமத்தில்,கோடைகால பயிராக வெள்ளரி சாகுபடி செய்வதில், பல விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.திருக்கழுக்குன்றத்தை ”ற்றிஉள்ள கிராமங்களில், நெல், தர்பூசணி, நிலக்கடலை, வெண்டை, கத்திரி, பாகற்காய், புடலங்காய், காரமணி, ”ரைக்காய்போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இப்பகுதி விவசாயிகள், கோடை காலத்தில், 200 ஏக்கரில் வெள்ளரியை அதிக அளவில் பயிர்இடுகின்றனர்.இதுகுறித்து, விப்பேடு விவசாயி தாஸ் கூறியதாவது:வெள்ளரி விதையை, நன்கு உழுத நிலத்தில், ஆறு அடி இடைவெளிவிட்டு குழி வெட்டி, ஒரு ஏக்கருக்கு ஏழு டன் தொழு உரம், இரண்டு மூட்டை ரசாயன உரம் கலந்து, விதை நேர்த்தி செய்த விதையை, ஒரு குழியில், நான்கு அல்லது ஐந்து விதைகள் நடவேண்டும். நட்ட நான்கு நாட்களில் செடிகள் முளைக்கும். பின், களைகளை அகற்றவேண்டும்.தேவைக்கேற்ப நீர் பாய்ச்சி, பூச்சிக்கொல்லி மருந்து, பயிர் ஊக்கிகள் தெளிக்க வேண்டும்.நட்ட, 40 நாட்களில், வெள்ளரி செடிகள் பிஞ்” விடும், அதன்பிறகு, 70 நாட்களில் பழம் பழுக்க ஆரம்பிக்கும், தர்பூசணி போல், ஒருமுறை மட்டும் அல்லாது, இரண்டு, மூன்று முறை மக‹ல் எடுக்கலாம்.இங்கு விளையும் வெள்ளரி பழங்கள், சரக்கு லாரிகள் மூலம் சென்னை, செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. நேரடியாகவும் வியாபாரிகள் வந்து, கொள்முதல் செய்கின்றனர். வெள்ளரி சாகுடியில், ஒரு

ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும். 35 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.இவ்வாறு, தாஸ் கூறினார்.

## கால்நடை தீவனம் வளர்க்க மானியம் விண்ணப்பங்கள் வரவேற்பு

காஞ்சிபுரம்:கால்நடை தீவனம் வளர்க்கும் திட்டத்திற்கு, விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்துஉள்ளார்.இது குறித்த அவரது அறிக்கை:காஞ்சிபுரம் மாவட்டத்தில், 550 ஏக்கரில், கால்நடை தீவனம் வளர்க்க அரசு மானியம் அறிவித்துள்ளது. குறைந்த அளவாக 0.25 ஏக்கர் முதல், ஒரு ஏக்கர் வரையில் விவசாயிகள்பயிரிடலாம். இதற்கான, விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து இருந்து வரவேற்கப்படுகின்றன. ஒரு ஏக்கரில், பயிரிடும் விவசாயிக்கு 8,000 ரூபாய் வரையிலும் மானியம் வழங்கப் படும். மதுராந்தகம், செய்யூர், மற்றும் உத்திரமேரூர் ஆகிய, வட்டாரங்களில் உள்ள விவசாயிகள், தங்கள் நிலங்களை சீர் செய்து, தீவனப் பயிரை பயிரிட்டு, பயனடையலாம். தகுதியுடைய, விவசாயிகள் வேளாண்மை அலுவலரின் பரிந்துரை சான்று பெற்று, அருகில் உள்ள கால்நடை மருத்துவ மனைகளில், உதவி மருத்துவரிடம் வழங்க வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பசுந்தீவனம் சாகுபடி விவசாயிகளுக்கு மானியம்

திருவள்ளூர்:மாவட்டத்தில், வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ், பசுந்தீவனம் சாகுபடி செய்ய அரசு மானியம் வழங்க உள்ளது.தமிழக அரசு சார்பில், விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில், இரண்டு ஆண்டுகளாக, மாநில தீவன விரைவு அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தீவனப் புல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.கடந்த ஆண்டுகளை போலவே, இவ்வாண்டிலும் பசுந்தீவனம் சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கப்பட உள்ளது.தேவையான விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகி பயன்பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## நாட்டு கோழி வளர்க்க விழிப்புணர்வு பேரணி

நாபளூர்:நாட்டு கோழி வளர்க்க வேண்டும், திணை பயிர்களான கம்பு, கேழ்வரகு, கீரை போன்றவற்றை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்ய வேண்டும் என, உழவர் பெருவிழாவில்

விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.திருவாலங்காடு ஒன்றியம், நாபளூர் ஊராட்சியில், உழவர் பெருவிழா, வேளாண்மை உதவி இயக்குனர் ஸ்ரீவித்யா தலைமையில், நேற்று முன்தினம் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் மணிமொழி வரவேற்றார். இதில், வேளாண்மை பொறியியல், தோட்டக்கலை, மீன்வளத் துறை, கால்நடை துறை உட்பட பல்வேறு துறை அதிகாரிகள், தங்களது துறை திட்டங்கள் குறித்து விளக்கி கூறினர்.தொடர்ந்து, 15 விவசாயிகளுக்கு, ஜிப்சம், விதைநெல், கீரை விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்களை வழங்கி, திருவாலங்காடு வேளாண்மை உதவி இயக்குனர் ஸ்ரீவித்யா பேசியதாவது:விவசாயிகள் சுத்திகரிக்கப்பட்ட விதைகளை பயன்படுத்த வேண்டும். கிராமங்களில் நாட்டு கோழிகளை வளர்க்க வேண்டும். மேலும், விவசாயிகள், கீரை, சீயக்காய், கம்பு, கேழ்வரகு போன்ற பாரம்பரிய வேளாண்மை பயிர்கள் பயிரிடுவதற்கு ஆர்வம் காட்ட வேண்டும்.விவசாயிகளுக்கு மானியம் மூலம், சூர்ய மின் மோட்டார்கள் வழங்கப்படுகின்றன. மோட்டார் வாங்குவதற்கு, ஐந்து லட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில், 4.20 லட்சம் ரூபாய் அரசு மானியமாக கொடுக்கிறது. விவசாயிகள், 80 ஆயிரம் ரூபாய் திருப்பி செலுத்தினால் போதுமானது. இது போன்ற பல்வேறு விவசாய கடன்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.முன்னதாக, நாட்டு கோழி வளர்ப்பு பாரம்பரிய வேளாண்மை பயிர்களான கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்கள் அதிகளவில் பயிரிட வேண்டும் என, விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

## ராசிபுரம் பகுதியில் உழவர் பெருவிழா: விவசாயிகளுக்கு செயல் விளக்கம்

ராசிபுரம்: வேளாண் துறை சார்பில், ராசிபுரம் அடுத்த தொட்டியப்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில், உழவர் பெருவிழா நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் வரதராஜூ தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் ஜெயமாலா வரவேற்றார். மண் மாதிரி எடுத்தல், பாசிப்பயறு விதை நேர்த்தி, பார்த்தீனியம் செடி ஒழிப்பு, சின்ன வெங்காயம் விதை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் நிலக்கடலை தரம் பிரித்தல் குறித்து, செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார், இளநிலை பொறியாளர் உதயக்குமார், உதவி வேளாண் அலுவலர் சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

* அணைப்பாளையம் ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், வேளாண் துணை இயக்குனர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். மரவள்ளி விதை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

* 85 ஆர்.குமாரபாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், பஞ்சாயத்து தலைவர் கவிதா தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஜெகநாதன் முன்னிலை வகித்தார். மண் மாதிரி எடுத்தல், மரவள்ளி கரணை நேர்த்தி, மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது.

* புதூர் மலையாம்பட்டி ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், மண் மாதிரி எடுத்தல், பாசிபயிறு வதை நேர்த்தி செய்தல், மரவள்ளி கரணை நேர்த்தி செய்தல், மினி டிராக்டர் மற்றும் மக்காச்சோளம் தரம் பிரித்தல் குறித்து செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.
* வடுகம் ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்த விழாவில், பஞ்சாயத்து தலைவர் சத்யா முன்னிலை வகித்தார். மண் மாதிரி எடுத்தல், மஞ்சள் தரம் பிரித்தல், பாசிபயிறு விதை நேர்த்தி செய்தல், வெங்காயம் விதை நேர்த்தி செய்தல் குறித்து விளக்கப்பட்டது.
* ஆணைகட்டிப்பாளையம் மாரியம்மன் கோவில் வளாகத்தில் நடந்த உழவர் பெருவிழாவில், யூனியன் கவுன்சிலர் சாந்தி முன்னிலை வகித்தார். மஞ்சள் தரம் பிரித்தல், பாசி பயிறு மற்றும் வெங்காயம் விதை நேர்த்தி செய்தல் குறித்து விளக்கப்பட்டது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

14.05.2013 A.M

## 85 நாட்களில் விளையும் பழங்குடியின மக்களுக்காக புதிய மக்காச்சோளம் கண்டுபிடிப்பு



அகமதாபாத் : குஜராத்தில் வாழும் பழங்குடியின மக்களுக்காக 85 நாட்களுக்குள்ளேயே அறுவடைக்கு தயாராகிவிடும் புதிய மஞ்சள் நிற மக்காச்சோளத்தை அனந்த் விவசாய பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது.

குஜராத்தில் 4.23 லட்சம் ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு 6 லட்சம் டன் சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. பழங்குடியின மக்கள் பெரும்பாலும் சோளத்தைதான் பயிரிடுகின்றனர். இவர்கள் பயிரிடும் சோளம், அறுவடைக்கு தயாராக குறைந்தபட்சம் 120 நாட்கள் வரை ஆகின்றன.
குஜராத் மாநில பழங்குடியின மக்களுக்காக அரியானா மாநிலத்தைச் சேர்ந்த ஹிசார் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் ஹைகுவாலிட்டி புரோட்டீன் மைஜ்,1 என்ற பெயரில் புதிய மக்காச்சோளம் கண்டுபிடித்து அளிக்கப்பட்டது.

இந்த மக்காச்சோளம் உட்பட வேறு எந்த சோளத்தையும் விட அதிகளவில் விளையக்கூடிய மஞ்சள் நிறத்தில் இருக்கும் புதிய சோளத்தை அனந்த் விவசாய பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது.

இதற்கு குஜராத் அனந்த் மஞ்சள் ஹைபிரிட் மைஜ்,1 (கேயம்) என்று பெயரிடப்பட்டுள்ளது. மற்ற வகை மக்காச்சோளம், ஒரு ஹெக்டேரில் அதிகபட்சமாக 1,439 கிலோ விளைகின்றன. ஆனால், கேயம் சோளம், ஒரு ஹெக்டேருக்கு 4,000 கிலோ வரை விளையும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 85 நாட்களுக்குள் அறுவடைக்கு தயாராகிவிடும் என்றும், காரீப் பருவத்தில் பழங்குடியினர் பகுதியில் பெய்யும் அதிகளவு மழையையும் இது தாக்குப்பிடிக்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.